

தாம்பரம் மாநகராட்சி, பொது சுகாதாரப் பிரிவு சார்பில்,டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக, மேற்கு தாம்பரம், கல்யாண் நகரில் உள்ள தாம்பரம் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. நிலவேம்பு குடிநீர் மற்றும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கங்களை வழங்கினார். இந்நிகழ்வில் மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ. பாலசந்தர், ஆர்.சஞ்சீவி மற்றும் அரசு அலுவலர்கள், கழக தோழர்கள் பங்கேற்றனர்.



சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்குப் பகுதி பாக நிலை முகவர்கள் (BLA2) கூட்டம் பகுதிச் செயலாளர் அ.முருகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார். டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. தொகுதி பார்வையாளர். கன்னிகை கோ.ஸ்டாலின் கேரல்டிலின் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர், வட்ட நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 180 - 180அ வட்டக்கழக பாகமுகவர்கள் கூட்டம்!

## க.கணேஷ்குமார், வி.எம்.டி.ராஜாராமணன் அறிக்கை!

சென்னை,நவ.9-

180 மற்றும் 180அ வட்டக்கழக BLA2 மற்றும் நிர்வாகிகளுக்கு வட்டக் கழக செயலார்கள் க.கணேஷ்குமார், வி.எம்.டி.ராஜாரமணன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இன்று 09.11.2024 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் திருவான்மியூர் சித்திரை குளம் வீதியில் உள்ள மகாலட்சுமி திருமண மண்டபத்தில் 180 மற்றும் 180அ வட்டக்கழகத்திற்குட்பட்ட பாகமுகவர்களின் (BLA2 )கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் வேளச்சேரி தொகுதி பொறுப்பாளர் சாய் ஜெயகாந்தன் [சுற்றுச்சூழல் அணி மாநில துணைசெயலாளர்] கலந்துக்கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்கள். மேலும் பகுதி கழக செயலாளர் துரை கபிலன் மற்றும் மாமன்ற உறுப்பினர் திருமதி. விசாலாட்சி கபிலன் கலந்துக் கொள்ள உள்ளார்கள்.

ஆகவே அனைத்து பாக முகவர்களும் வட்டக்கழக நிர்வாகிகளும் அணிகளின் நிர்வாகிகளும் தவறாது கலந்துக்கொள்ளுமாறு வட்ட கழக செயலாளர்கள் க.கணேஷ்குமார், வி.எம்.டி.ராஜா ரமணன் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சென்னை வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டகழக கூட்டம் நாளை 10–11–2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் **ஆர்.வெற்றிவீரன்** தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் **டாக்டர். கலாநிதி வீராசாமி,** சட்டமன்ற உறுப்பினர்கள் **ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜெ.ஜெ.எபினேசர்** முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர்கள், வட்டக்கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் -துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா.
கழக ஆக்க பணிகள்

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் வடக்கு ஒன்றிய வாக்குச் சாவடி பாகமுகவர்கள் ஆய்வுக் கூட்டம், சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் நா.செல்வசேகரன் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் பொன்னேரி தொகுதி பொறுப்பாளர் கா.அமுதரசன் கலந்து கொண்டு பாகமுகவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். நிகழ்ச்சியில் மு.பகலவன், மு.கதிரவன், எஸ்.ரமேஷ், மு.பாஸ்கர், ஜி.பி.வெங்கடேசன், விக்னேஷ் உதயன், வழக்கறிஞர் அணி இளையராஜா, சுரேந்தர், சரவணன் சோழவரம் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாகமுகர்கள் பங்கேற்றனர்.



சென்னை மாநகராட்சி 119வார்டு தி.மு.க. கவுன்சிலர் கமலா செழியன் நேற்று மீர்சாகிப் பேட்டை பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் ”தூய்மையே சேவை 2024 என்ற விழிப்புணர்வு பேரணியை கொடிசைத்து துவக்கி வைத்தார் .இந்நிகழ்வில் 119– வது வட்ட செயலாளர் க.வே. மோகன் உள்பட மாநகராட்சி அதிகாரிகள் விழிப்புணர்வு குழுவினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.

## தொகுதிப் பொறுப்பாளர் பரிதி இளம் சுருதி ஆலோசனை வழங்குகிறார்!

# சைதை மேற்குப் பகுதி -142, 142 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. அறிக்கை!

சென்னை, நவ.9-

சைதை மேற்குப் பகுதி கழக செயலாளரும், புத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவரும், தமிழகத்தின் நிரந்தர முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளிலும் புத் கமிட்டி அமைத்தல், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்காளர் பெயர் சேர்த்தல், பெயர் நீக்குதல், இரட்டை பதிவு சரிபார்த்தல் உள்ளிட்ட தேர்தல் பணிகளை மேற்பார்வையிடும் தொகுதி பார்வையாளர்களை நியமனம் செய்தார்.

அதன் அடிப்படையில் சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதியில் உள்ள 142-வது வட்டம் மற்றும் 142(அ) வட்டம் ஆகிய ஒருங்கிணைந்த இரு வட்டங்களிலும் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி சைதை மேற்கு பகுதி கழக செயலாளர், புத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையிலும், 142(அ) வட்ட கழக செயலாளர் எம்.பி.கோதண்டம், 142 வட்ட கழக செயலாளர் எம்.நாதா வரவேற்பில் சைதாப்பேட்டை, அப்துல் ரசாக் தெருவில் உள்ள எஸ்.பி.எஸ் திருமண மண்டபத்தில் 10.11.2024 ஞாயிற்று கிழமை காலை 9 மணியளவில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளரும், மாநில அயலக அணி துணை செயலாளரும் பரிதி இளம்சுருதி பங்கேற்று பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

எனவே இக்கூட்டத்திற்கு பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி. பகுதி கழக நிர்வாகிகள் களக்காடு எல்லப்பன், ஆர்.ரமேஷ், த.சம்பத், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், மாவட்ட இளைஞர்அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், உள்ளிட்ட இரு வட்டங்களை சார்ந்த மாவட்ட பிரதிநிதிகள்கிண்டிஆர்.எல்.செல்வம், பால்கார்ரவி, பொன்ஜெய்சிங், வட்டகிளை கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள், அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் ஆகியோர் தவறாமல் கலந்துகொண்டு இக்கூட்டத்தினை சிறப்பித்து தருமாறு சைதை மேற்கு பகுதி செயலாளரும், புத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சைதை கிழக்கு பகுதி வட்ட வாரியாக

# நிர்வாகிகள் - அணிகளின் நிர்வாகிகள் -பாக முகவர்கள் (பிஎல்ஏ-2) ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – பரிதி இளம் சுருதி பங்கேற்பு!

## பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. அறிவிப்பு!

*சென்னை, நவ.9*

*கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்கவும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தல் படியும் வருகிற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை சிறப்பாக எதிர் கொண்டு குறைந்த பட்சம் இருநூறு தொகுதிகளுக்கு மேல் கழக கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் தமிழ்நாட்டில் கழக தலைவர் தலைமையில் திராவிட மாடல் அரசு அமைக்க வியூகம் வகுத்து அதனை செயல்படுத்துவது குறித்து சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதியில் உள்ள கீழ்க்காணும் எட்டு வட்டங்களிலும் வட்ட வாரியாக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் பாக முகவர்கள் (பிஎல்ஏ-2) ஆலோசனைக் கூட்டம் இன்று (09.11.2024 சனிக்கிழமை) மற்றும் 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களில் கீழ் கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது.*

*அதன் விவரம் வருமாறு:*

*1) 170, 170அ வட்டம், 09.11.2024 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு, கோட்டூர், மேற்கு கால்வாய் கரை சாலை, முத்துமாரியம்மன் கோவில் வளாகத்தில் வைத்தும்*

*2) 169, 169அ வட்டம், 09.11.2024, சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு, சைதாப்பேட்டை, கிழக்கு ஜோன்ஸ் சாலை, ஸ்ரீசாய் கிருஷ்ணா மஹாலில் வைத்தும்*

*3) 168 மற்றும் 168அ வட்டம், 10.11.2024, ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு ஈக்காட்டுத்தாங்கள், சத்திய மூர்த்தி நகர், காமாட்சி அம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள மாமன்ற உறுப்பினர் தொழிலகத்தில் வைத்தும்*

*4) 172 மற்றும் 172அ வட்டம், 10.11.2024, ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு, நேரு நகர் நெடுஞ்செழியன் தெருவில் அமைந்துள்ள சைதை கிழக்கு பகுதி திமுக அலுவலகத்தில் வைத்தும் நடைபெற உள்ளது.*

*இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் மா. சுப்பிரமணியன், சைதை தொகுதி மேலிட பொறுப்பாளர் பரிதி இளம் சுருதி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்கள்.*

*எனவே மேற்கண்ட அட்டவணையில் உள்ளபடி நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட வட்டங்களில் உள்ள கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆகியோர் குறித்த நேரத்தில் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் சைதை கிழக்கு பகுதி செயலாளரும், 13வது வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.*

## தியாகராயர் நகர் மேற்குப் பகுதி

# 132 வது வட்டக் கழக நிர்வாகிகள் - பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் ந.மோ.முரளி வேண்டுகோள்!

*சென்னை, நவ. 9-*

*தியாகராயர் நகர் - 132வது வட்டச் செயலாளர் ந.மோ. முரளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராய நகர் மேற்கு பகுதி 132 வது வட்டக் கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் கூட்டம் இன்று (9.11.2024 - சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, கோடம்பாக்கத்தில் அமைந்துள்ள அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் புலியூர் எம்.ராமச்சந்திரன் தலைமையில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக துணை செயலாளர் கோடம்பாக்கம் மு.சத்யா முன்னிலை யில் நடைபெறுகிறது.*

*இந்த கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர், மயிலை த.வேலு, தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பகுதி கழக செயலாளர் கே ஏழுமலை, தியாகராயர் நகர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பத்மப்ரியா கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.*

*இந்தக் கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2), மாவட்ட பிரதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளும்படி டேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள்: பாக முகவர்கள், பாக குழு உறுப்பினர்கள் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா, கழக ஆக்கப் பணிகள்*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

## சைதை கிழக்கு பகுதி

# 169வது அ வட்ட ஆலோசனை கூட்டம்!

## மு.மகேஷ்குமார், இரா.துரைராஜ் பரிதி இளம் சுருதி பங்கேற்பு


## சைதை மு.இராஜா, எல் ஆரோக்கியராஜ், அறிவிப்பு!

சென்னை,நவ.9-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு மா.சுப்பிரமணியன் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் ஒருங்கிணைந்த 169 வட்ட ஆலோசனைக் கூட்டம் 9.11.2024 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சைதாப்பேட்டை கிழக்கு ஜோன்ஸ் சாலையில் உள்ள சாய் கிருஷ்ணா ஹாலில் நடைபெற உள்ளது இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன் கலந்து கொள்கின்றனர். எனவே ஒருங்கிணைந்த வட்டத்திற்குட்பட்ட பகுதி நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட அணிகளின் தலைவர்கள் துணை தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் பகுதி பிரதிநிதிகள் வட்ட செயற்குழு உறுப்பினர்கள் பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட கடம்பத்தூர் மேற்கு திருவள்ளூர் நகர திமுக சார்பில் BLA 2 மற்றும் BLC பாக முகவர்கள் ஆய்வு கூட்டம் ஒன்றிய, நகரச் செயலாளர்கள் கே.அரிகிருஷ்ணன், சி.சு.ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம். எல்.ஏ. திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ.சேகர் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்கள்நிர்வாகிகள் பொன். பாண்டியன், ஆர்.செங்குட்டுவன், தி.ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, ராஜேஸ்வரி கைலாசம், என்.பரசுராமன், சம்பத் ராஜ், டி.என்.ஆர்.சீனிவாசன், இ.குப்பன், டி.சிவகுமார், ம.கிரண், பி.கே.நாகராஜ், டி.கே.பாபு, , வி.எஸ். நேதாஜி, வி.எஸ்.சதீஷ், டேனியல், சித்திக் அலி, சி.சு.விஜகுமார்,என்.நந்தகோபால், மோகன சுந்தரம், ஆர். டில்லி, பெருமாள்,மற்றும் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக செயலாளர்கள் கிளைக் கழகச் செயலாளர்கள் பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்கள்.



தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞராகப் பொறுப்பேற்றுள்ள கே.சந்திரமோகனை, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

## எழும்பூர் - 99வது வார்டு - நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில்

# பரிதி இளம்சுருதி எம்.சி. ஆய்வு!

## பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை!

*சென்னை, நவ. 9-*

*எழும்பூர் சட்டமன்றத் தொகுதி வார்டு 99 உட்பட்ட நேரு பூங்கா நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு 12வது பிளாக்கில் உள்ள 288 குடியிருப்புகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகளுடன் எழும்பூர் தொகுதி 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினரும் - தி.மு.க. அயலக அணி மாநில துணைச் செயலாளர் பரிதிஇளம் சுருதி, சிதிலம் அடைந்த படிக்கட்டுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அதை உடனடியாக சீர் செய்ய அதிகாரிகளுக்கு கோரிக்கை வைத்தார்.*

*அதனை ஒட்டி அந்தமான் பகுதியில் வசிக்கும் மக்களிடம் குறைகளை கேட்டு அறிந்தார். அப்பகுதியில் உள்ள இரண்டு குழந்தைகள் மையத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன் பின்னர் புரசைவாக்கம் வெள்ளாளர் தெரு சென்னை நடுநிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு அப்பகுதியில் உள்ள சத்துணவுக் கூடம் மற்றும் குழந்தைகள் மையத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*இந்த ஆய்வின்போது நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகள் முத்துலட்சுமி, விமல், 99வது வார்டு பொறியாளர் கே.சிவக்குமார், துப்புரவு ஆய்வாளர் கிருஷ்ண மூர்த்தி, நேரு பூங்கா கழகத் தோழர்கள் ஜலேந்திரகுமார், கலைவாணி, முனாப், வெள்ளாளர் தெரு நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் சகிலா மற்றும் குழந்தைகள் மைய ஆசிரியர்கள் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.*



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகர கழகப் பிரதிநிதி ஆர்.பன்னீர்செல்வம் தாயார் ஆர்.முனியம்மாள் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு பார்வையற்றோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பகுதி வாழ் 1000 மக்களுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். மாடம்பாக்கம் ஆ.நடராஜன் தலைமை வகித்தார். இந்நிகழ்வில் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், திருநீர்மலை த.ஜெயக்குமார், பொன்.சதாசிவம், இ.எம்.சாம்சன், டி.ராஜாராம், எஸ்.விமலா, எஸ்.வேலவன், ஜெ.செல்வம், பொ.செந்தில்குமார், எம்.செந்தில்குமார், ரமாதேவி செந்தில்குமார், எம்.கே. மோகனரங்கன், எம்.கண்ணன் (எ) சாந்தகுமார், எம்.பெருமாள், ஆர்.குமார், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.ராதா கிருஷ்ணன், ஆர்.புருஷோத்தமன், லலிதா கிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி சார்பில் பகுதி கழகச் செயலாளர் க.ஜெயராமன் தலைமையில் பாக நிலை முகவர்கள் பிஎல்ஏ 2 கூட்டம் நடைபெற்றது. மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் பாக நிலை முகவர்களுக்கு ஆலோசனை வழங்கினர். இந்நிகழ்வில் இரா. கருணாநிதி இரா.நரேந்திரன், எஸ்.ஆர் கமலக்கண்ணன், வி.தயாளன், ஏ. தமிழ்ச்செல்வன், டி. கமலக்கண்ணன், ப. மதிவாணன், க. அமுல், மு.ஷாகுல் ஹமீது, எஸ்.சாக்ரடீஸ், வி.வேதா, ஆர்.ஜோதிமணி, வி.எஸ் பிரபு, வட்டக் கழக செயலாளர்கள் ஏ.ஆர்.ஆர் மலைச்சாமி, க.பாபு, த.ஆறுமுகம், ஆர்.எஸ். மனோகரன், ஜி.மாரிமுத்து, கேபிள் கே.தினகரன், வி. முருகன், மு.ஆனந்தி எம்.சி. உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.